பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**30 05 2026** **7 15**

சனிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்குகளை எட்டும் வகையில், இளைஞர்கள் வழிநடத்தப்பட்ட வேண்டியது அவசியம் என்று மத்திய அமைச்சர் திரு மனசுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

2. எரிபொருள் சேமிப்புக்கான கட்டமைப்புகளை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

3. மியான்மர் அதிபர் திரு **U Min Aung Hlaing** ஐந்து நாள் அரசு முறைப் பயணமாக இன்று இந்தியா வருகிறார்.

4. நாட்டின் வடமேற்குப் பகுதிகளில் பெரும்பாலான இடங்களில் வெப்ப அலை வீசக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில், குஜராத் அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் ராஜஸ்தான் அணியை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்குகளை எட்டும் வகையில், இளைஞர்கள் வழிநடத்தப்பட்ட வேண்டியது அவசியம் என்று மத்திய இளையோர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு மனசுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

மேகாலயா தலைநற் ஷில்லாங்கில் உள்ள இந்திய மேலாண்மை கல்வி நிறுவனத்தில் நடைபெற்ற இரண்டு நாள் கருத்தரங்கின் தொடக்க அமர்வில் பேசிய அவர், இதனைத் தெரிவித்தார்.

இளைஞர்கள் நாட்டின் வளர்ச்சி நடவடிக்கைகளில் பங்கேற்கச் செய்யும் நோக்கில், இத்தகைய நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருவதாக அவர் கூறினார்

கொள்கைகள் வகுப்பது, தலைமைத்துவப் பண்பை மேம்படுத்திக் கொள்வது போன்ற நிகழ்ச்சிகள் மை பாரத் இணைய தளம் வாயிலாக நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அரசு அதிகாரிகள் மற்றும் கள அதிகாரிகளுக்குமிடையே சிறந்த ஒத்துழைப்பு இருக்க வேண்டியதன் அவசியத்தை, மத்திய இளைஞர் விவகாரங்கள் துறை இணையமைச்சர் திருமதி ரக்ஷா காட்சே வலியுறுத்தியுள்ளார்.

இந்த நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், இளையோர் சங்கங்கள் மற்றும் விளையாட்டுக்களை ஊக்குவிப்பதன் வாயிலாக, வடகிழக்கு மாநிலங்களில் உள்ள இளைஞர்களால் தவறான பாதையில் செல்லாமல் தடுக்க முடியும் என்று அவர் கூறினார்.

இதுபோன்ற நிகழ்ச்சிகள், சவால்களைக் கண்டறிந்து, இளைஞர்களை சிறந்த முறையில் வழிநடத்த உதவிடும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

<<<<>>>>

மேற்காசியாவில் நிலவும் சூழலைக் கருத்தில் கொண்டு 30 நாட்களுக்குத் தேவையான எரிபொருள் கையிருப்பை எண்ணெய் நிறுவனங்கள் உறுதி செய்ய வேண்டும் என்று மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய பெட்ரோலியத்துறை இணைச்செயலர் திருமதி சுஜாதா சர்மா, எரிபொருள் சேமிப்புக்கான கட்டமைப்புகளை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறினார்.

எரிபொருள் விநியோகம் சீராக நடைபெறுவதை உறுதி செய்யும் வகையில் பெட்ரோலியப் பொருட்கள் போதிய அளவில் கையிருப்பில் உள்ளதாக அவர் கூறினார்.

நாள்தோறும் 92 ஆயிரம் மெட்ரிக்டன் சமையல் எரிவாயு உற்பத்தி செய்யப்படுவதாக அவர் தெரிவித்தார்.

பெட்ரோல் நிரப்பும் மையங்கள் முழுமையாக செயல்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

நிலைமையை மத்திய அரசு தொடர்ந்து கண்காணித்து வருவதாகவும் திருமதி சுஜாதா சர்மா தெரிவித்தார்.

<<<<>>>>

மியான்மர் அதிபர் திரு **U Min Aung Hlaing** ஐந்து நாள் அரசு முறைப் பயணமாக இன்று இந்தியா வருகிறார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் திரு ரன்திர் ஜெய்ஷ்வால், அவரது இந்தப் பயணத்தின் போது பிரதமர் திரு நரேந்திர மோடியை சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சு நடத்துவார் என்று தெரிவித்தார்.

இந்தியா - மியான்மர் யிடையேயானா பல்வேறு விவகாரங்கள் குறித்து இரு தலைவர்களும் விவாதிக்கவுள்ளதாக அவர் கூறினார்.

இதனிடையே, இந்தியா - சீனா நாடுகளிடையே எல்லை விவகாரம் தொடர்பாக அண்மையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் ஆக்கபூர்வமானதாக இருந்தது என்று அவர் தெரிவித்தார்.

இந்த பேச்சுவார்த்தையில், எல்லைகளை வரையறை செய்வது, எல்லைப்புற மேலாண்மை உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து விவாதிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

உகாண்டாவில் நிலவி வரும் போது சுகாதார சூழலைக் கருத்தில் கொண்டு, மருந்துகள் உட்பட தேவையான உதவிகளை அந்நாட்டிற்கு வழங்க இந்தியா தயாராக உள்ளது என்று அவர் தெரிவித்தார்.

பங்களாதேஷிலிருந்து சட்ட விரோதமாக புலம்பெயர்வது தொடர்பான கேள்விக்கு, அவர்கள் மீது சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று திரு ரன்திர் ஜெய்ஷ்வால் தெரிவித்தார்.

வளைகுடா பகுதியில் பதினோரு இந்தியக் கப்பல்கள் நிற்பதாகவும், பதினான்கு கப்பல்கள் ஹோர்முஸ் நீரினை வழியாக இந்தியா வந்தடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தியா - அமெரிக்கா இடையேயான வர்த்தகப் பேச்சு வார்த்தைகள் சுமுகமாக நடைபெற்று வருவதாகவும், இந்தே

பேச்சுவார்த்தைகளைத் தொடர, அடுத்த வாரத்தில் அமெரிக்கப் பிரதிநிதிகள் குழு இந்தியா வரவுள்ளதாகவும் அவர் கூறினார்.

நாட்டின் எரிசக்திப் பாதுகாப்பு மிக முக்கியத்துவம் வாய்ந்தது என்றும், பல்வேறு நாடுகளிலிருந்து கச்சா எண்ணையைக் கொள்முதல் செய்வதற்கான முயற்சிகளை அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருவதாகவும், திரு ரன்திர் ஜெய்ஸ்வால் தெரிவித்தார்.

<<<<>>>>

கோவா மாநிலம் உதய தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி தலைநகர் பனாஜியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிகழ்ச்சியில் குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் பங்கேற்கிறார்.

கோவா விடுதலை பெற்றதில் இருந்து இந்தியாவின் ஒரு மாநிலமாக உருவெடுத்தது வரையிலான பயணத்தை குறிக்கும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களில் கடந்த நிதியாண்டில் நிதி மோசடி தொடர்பாக **10** ஆயிரத்து **114** வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

ரிசர்வ் வங்கி வெளியிடும் வருடாந்திர அறிக்கையில், கடந்த **3** ஆண்டுகளில் நடைபெற்ற நிதி மோசடி தொடர்பான வழக்கு விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

கடந்த நிதியாண்டில் இதன் மதிப்பு **48** ஆயிரத்து **21** கோடி ரூபாயாக உள்ளது என்று அந்த அறிக்கை மேலும் கூறுகிறது.

பொது மற்றும் தனியார் வங்கிகளில் நடைபெறும் நிதி மோசடிகளின் எண்ணிக்கை குறைந்துள்ளபோதிலும் அண்மை ஆண்டுகளில் அதன் மதிப்பு அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

உரிமை கோரப்படாமல் உள்ள நிதிசார் சொத்துக்கள் குறித்த தகவல்களை எளிதாகக் கையாளும் வகையில் பொது இணையதள சேவையை நிதிசார் சேவைகள் துறை தொடங்கியுள்ளது.

பொதுத்துறை வங்கிகள் கூட்டமைப்பின் ஒத்துழைப்புடன் இந்த இணையதளம் வடிவமைக்கப்பட்டுள்ளதாக மத்திய நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.

உரிமை கோரப்படாத வைப்பத் தொகை, காப்பீடு, பங்குகள், டிவிடெண்ட் மற்றும் பரஸ்பர நிதி போன்றவை குறித்த தகவல்களைப் பெறுவதற்கான வசதிகளும் இந்த இணையதளத்தில் வழங்கப்பட்டுள்ளதாக அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

இந்த இணையதளம் எளிதில் பயன்படுத்தும் வகையிலும், வெளிப்படைத்தன்மையுடனும், மக்களை மையமாக கொண்ட நிதிசார் கட்டமைப்பாகவும் இருக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

பஞ்சாப் மாநிலத்தில் நடைபெற்ற உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலில் ஆம் ஆத்மி கட்சி 958 வார்டுகளில் வெற்றி பெற்றுள்ளது.

காங்கிரஸ் கட்சி 397 வார்டுகளிலும், சிரோன்மணி அகாலிதள் 192 இடங்களிலும், பிஜேபி 172 இடங்களிலும் வெற்றி பெற்றுள்ளன.

<<<<>>>>

ஈரான் உடனான போர்நிறுத்தம் குறித்த பேச்சுவார்த்தைகள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளதாக அமெரிக்க துணை அதிபர் திரு. **J.D. Vanes** தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அதிபர் திரு. திரு. டோனல்ட் ட்ரம்ப்-ன் அனுமதி கிடைத்தவுடன் இந்தப் பேச்சுவார்த்தைகள் இறுதி செய்யப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே போர்நிறுத்தம் குறித்து எவ்வித ஒப்பந்தமும் இறுதி செய்யப்படவில்லை என்று ஈரான் செய்தி ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

<<<<>>>>

நாட்டின் வடமேற்குப் பகுதிகளில் பெரும்பாலான இடங்களில் வெப்ப அலை வீசக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தெலங்கானா, மத்தியப்பிரதேசத்தில் இன்று வெப்பம் அதிகரிக் கூடும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

குஜராத், மகாராஷ்டிரா, மத்தியப்பிரதேசம், சத்தீஸ்கர் ஆகிய பகுதிகளின் ஒரிரு இடங்களில் இன்றும், நாளையும் பலத்த காற்றுடன் கூடிய மழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்கால், கர்நாடகா, ஜம்மு-கஷ்மீர் உள்ளிட்ட பகுதிகளில் ஓரிரு இடங்களில் இடியுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே தென்மேற்கு பருவமழை தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளதாக வானிலை மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

ஐ. பி. எல். கிரிக்கெட் போட்டியில், குஜராத் அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் ராஜஸ்தான் அணியை வென்றது.

சண்டிகரில் நேற்று நடைபெற்ற போட்டியில், முதலில் பேட் செய்த ராஜஸ்தான் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 214 ரன் எடுத்தது.

215 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய குஜராத் அணி 18 புள்ளி 4 ஓவரில் 3 விக்கெட் இழப்பிற்கு 219 ரன் எடுத்தது.

அகமதாபாத்தில் நாளை நடைபெறும் இறுதி போட்டியில், குஜராத் அணி, பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

-----------

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கிடையேயான இரண்டாவது மகளிர் டிவெண்ட்டி - டிவெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

**Bristol-ல் இப்போட்டி, இன்றிரவு 7 மணிக்குத் தொடங்குகிறது.**

**<<<<The End>>>>**